



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| VOLUME : 01 | ISSUE: 298 | 21.04.2026 | TUESDAY | CHITHIRAI: 8 | PRICE : RS.5/- |
| மலர் : 01 | இதழ் : 298 | 21.04.2026 | செவ்வாய்கிழமை | சித்திரை : 8 | விலை : ரூ.5/- |


## இரு நாடுகள் இடையே 15 ஒப்பந்தங்கள் கையெழுத்து

# "பிரதமர் மோடியுடன் தென் கொரிய அதிபர் சந்திப்பு"

## விஜய் வேட்புமனுவில் சொத்து மதிப்பை குறைத்துக் காட்டியது முறைகேடானது: உயர் நீதிமன்றம்

சென்னை: ஏப்.21-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தவெக தலைவர் விஜய் சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிடுகிறார். இரு தொகுதிகளிலும் விஜய் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் இடம் பெற்றுள்ளதாகவும், பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்த வேட்புமனுவில் சொத்துக் கணக்கை மறைத்துள்ளதாகவும் கூறி, வியாசர்பாடியைச் சேர்ந்த பெரம்பூர் வாக்காளரான விக்னேஷ் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், 'பெரம்பூர் தொகுதியில் தாக்கல் செய்த வேட்பு மனுவில், தனது சொத்து மதிப்பு, 115 கோடியே 13 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் எனக் குறிப்பிட்டிருந்த விஜய், திருச்சி கிழக்கு தொகுதிக்கான வேட்புமனுவில், 220 கோடியே 15 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருச்சி கிழக்கு தொகுதியில் தாக்கல் செய்த வேட்புமனுவில் குறிப்பிட்ட சொத்து மதிப்பை விட, பெரம்பூரில் தாக்கல் செய்த வேட்புமனுவில் குறைவாக காட்டியது உண்மைத் தகவலை மறைத்ததற்கு சமம் என்பதால், விஜய் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் தெரிவித்துள்ள சொத்து விவரங்கள் முழுமையானவையா, உண்மையானவையா என விசாரிக்க, வருமான வரித் துறைக்கும், தேர்தல் ஆணையத்துக்கும் உத்தரவிட வேண்டும்' என மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஜே. தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது, இரு தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்தவர், ஒரு தொகுதியில் 100 கோடி ரூபாய் வரை குறைத்து காட்டியது முறைகேடானது என நீதிபதிகள் தெரிவித்தனர்.

பின்னர் இந்த வழக்கு தொடர்பாக பதில் அளிக்கும்படி வருமான வரித் துறைக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளி வைத்துள்ளனர்.

புதுடெல்லி: ஏப்.21-

இந்தியா தென் கொரியா இடையேயான இருதரப்பு உறவை, எதிர்கால கூட்டாண்மை (futuristic partnership) நிலைக்கு உயர்த்த இரு தரப்பும் முடிவு செய்துள்ளது. மேலும், இரு நாடுகளுக்கு இடையே 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

தென் கொரிய அதிபர் லீ ஜே மையுங் அரசு முறைப் பயணமாக நேற்று புதுடெல்லி வந்தடைந்தார். அதிபராக பொறுப்பேற்ற பிறகு அவர் மேற்கொண்ட முதல் இந்திய பயணம் இது. விமான நிலையத்தில் மத்திய இணை அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ரா உள்ளிட்டோர் அவரை வரவேற்றனர். இதையடுத்து, தென் கொரிய அதிபரை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன் தொடர்ச்சியாக நேற்று காலை டெல்லியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்துக்குச் சென்று மரியாதை செலுத்திய தென் கொரிய அதிபர், பின்னர் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வருகை தந்தார். அவரை



குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் வரவேற்றனர். அங்கு அவருக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

பின்னர் பிரதமர் மோடி தென் கொரிய அதிபர் லீ ஜே மையுங் இடையே இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில், இரு நாடுகளின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த பேச்சுவார்த்தையில், இரு நாடுகளுக்கு இடையேயான உறவை எதிர்கால கூட்டாண்மை (futuristic partnership) நிலைக்கு உயர்த்த இரு தரப்பும் ஒப்புக்கொண்டது.

இந்தச் சந்திப்பு குறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "இந்தியாஞ்தென் கொரியா சிறப்பு உத்திசார் கூட்டாண்மையில் (Strategic Partnership) ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த முன்னேற்றத்தை இரு தலைவர்களும் ஆய்வு செய்தனர்.

வர்த்தகம், நிதிச் சேவைகள், கப்பல் கட்டுமானம், செயற்கை நுண்ணறிவு, எரிசக்தி, குறைக்கடத்திகள், முக்கிய வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், பாதுகாப்பு, கலாச்சாரப் பரிமாற்றங்கள் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இரு தலைவர்களும் பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் விவாதித்தனர். பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, பொருளாதாரம், வர்த்தகம், கப்பல் கட்டுதல் மற்றும் கடல்சார் துறை, டிஜிட்டல் துறை, முக்கிய வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள், கல்வி, கலாச்சாரம், விளையாட்டு மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகள் ஆகிய துறைகளில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறப்பட்டன.

இந்த முடிவுகள் நமது இருதரப்பு கூட்டாண்மைக்கு மேலும் புத்துயிர் அளித்து, நமது மக்களுக்கும் தொழில்துறைக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரு நாடுகளுக்கு இடையே 15 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தனதாக தெரிவித்துள்ளது.






## ஆதிதிராவிட நலத்துறை அமைச்சராகிறார் இளம்பை தமிழ்ச்செல்வன்?

### பெரம்பலூரில் அதிமுகவுக்கு வெற்றி உறுதி!

தமிழக சட்டமன்ற தேர்தலில் ஆங்காங்கே கட்சிகளின் உள்ளடி வேலைகள், மாற்றுக் கட்சியினருக்கு வெளிப்படையாக வேலை செய்வது போன்ற ஏகப்பட்ட களபேரங்கள் அரங்கேற்றப்பட்டு வந்த போதிலும், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்கும் இது விதிவிலக்கு அல்ல.

தனது சொந்த தொகுதியான பெரம்பலூர் சட்டமன்ற தனி தொகுதியில் திமுக பொதுச்செயலாளர் ஆ.ராசா, டாக்டர் எஸ்.டி. ஜெயலட்சுமிக்கு சீட்டு ஒதுக்குவதற்கு தலைமையில் ரெடி பண்ணியிருந்தார். இவ்வேளையில் தற்போதைய எம்எல்ஏவான பிரபாகரன், அமைச்சர்கள் சிவசங்கர் மற்றும் நேரு மூலமாக, சபரீஷனிடம் சென்று சீட் ஒதுக்குவதற்கு வேலையை முடித்து விட்டாராம். இந்த தகவல் இறுதி கட்டத்தில் தான் ஆ.ராசாவிற்கு தெரிய வந்திருக்கிறது. அதன்பிறகு என் சொந்த தொகுதியில், நான் சொல்லும் நபருக்கு தான் சீட்டு தர வேண்டும், ஜெயிக்க வைப்பது என் பொறுப்பு என்ற ஆ ராசாவின் பெரும் முயற்சிக்குப் பிறகு, தற்போது வேட்பாளராக இருக்கும் ஜெயலட்சுமிக்கு சீட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. டாக்டர் ஜெயலட்சுமி எப்படியும் ஜெயிக்க வைத்து தலைமையிடம் நல்ல பெயர் வாங்காவிட்டால், தனக்கு பெருத்த அசிங்கமாகிவிடும் என்று ராசா உயிரையே கொடுத்து வேலை



செய்கிறாராம்.

அதிமுகவிலோ மூன்று முறை போட்டியிட்டு, இரண்டு முறை எம்எல்ஏவாக இருந்த அதிமுக மாவட்ட செயலாளர் இளம்பை தமிழ்ச்செல்வன், மீண்டும் நான்காவது முறையாக போட்டியிடுகிறார். அதிமுகவில் ஒரு சில சீனியர் தலைகள் மாவட்ட செயலாளர் தமிழ்ச்செல்வன் மீது பொதுச் செயலாளரிடம் பலமுறை புகார் அளித்தும், தலைமை சைலண்டாகவே இருந்து வந்தது.

இதையெல்லாம் கடந்து வந்த இளம்பை தமிழ்ச்செல்வன் சுறுசுறுப்பாகவும், துடிப்புடனும் தனக்கே உரிய பாணியில் ஆங்காங்கே ஓட்டு கேட்டு செல்லும் இடமெல்லாம், ஏகப்பட்ட வரவேற்புகள் உள்ளனவாம். தான் ஏழ்மை நிலையில் இருந்து தற்போது இந்த நிலைக்கு வந்தவுடன், எப்போதும் பழசை மறக்காமல் இன்றளவும் கட்சிக்காரர்கள் மட்டும் இல்லாமல் அனைத்து தரப்பினரிடமும் ஒட்டி உறவாடி வந்ததன் பயன், தற்போது தமிழ் செல்வனுக்கு பெரிய அளவில் கை கொடுக்கிறது என்கிறார்கள்.

தனக்கு எதிராக புகார் அளித்த அனைவரிடமும் பகைமை காட்டிக் கொள்ளாமல், நேரில் சென்று சிறப்பு செய்து அழைப்பு விடுத்திருக்கிறார். அதன் பிறகு எதையும் பொருட்டாக கருதாமல், தன் பிரச்சார யுக்தியில் மக்களோடு மக்களாக தன் சொந்த மண்ணில் நட்பு பாராட்டி வருவதால், இதுவரை தமிழ்ச்செல்வன் பிரச்சாரம் சென்ற இடத்தில் எங்கேயும் எதிர்ப்பு என்ற பேச்சுக்கே இடம் இல்லை.

ஆனால் திமுகவிலோ ஒரு சில இடங்களில் எதிர்ப்பும் இருந்ததுடன், சில ஊர்களில் ஓட்டு கேட்டு ஊருக்குள்ளேயே வரக்கூடாது என்று தடுத்து விட்டார்களாம். திமுகவில் ஆ.ராசா எவ்வளவுதான் உயிரைக் கொடுத்து வேலை பார்த்தாலும், அதிமுக மாவட்ட செயலாளர் இளம்பை தமிழ்ச்செல்வனுக்கு அவரின் எளிய அணுகுமுறை பெரிய அளவில் கை கொடுத்து வருகிறது.

தான் ஓட்டு கேட்டு விவசாயிகளிடம் வேலை செய்த நிலத்திற்கே சென்ற பொழுது, தானும் விவசாயியாக மாறி, சேற்றில் இறங்கி, களை எடுத்து வாக்கு சேகரித்திருக்கிறார் தமிழ்செல்வன். இதனால் இந்த தகவல் அறிந்த பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி விவசாயிகள் ரொம்பவே குளிர்ந்து போயிருக்கிறார்களாம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் திமுக வேட்பாளர் டாக்டர் ஜெயலட்சுமியை, திமுக கட்சியினருக்கே தெரியவில்லை. அதனால் தான் இந்த சட்டமன்ற தேர்தலில் ஆ.ராசாவின் உழைப்பு வீணாகிப் போய்விடும் என்கிறார்கள் சொந்தக் கட்சியினரே. எவரிடமும் அதிர்ந்து பேசாமலும், நட்புடனும் பழகுவதாலும், தற்போதைய நிலவரப்படி அதிமுக வேட்பாளர் இளம்பை தமிழ்ச்செல்வனுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என்பதையே காட்டுகிறது. இதனை உறுதி செய்யும் விதமாக தந்தி டிவி கருத்துக்கணிப்பிலும் அதிமுகவின் வெற்றியை சுட்டிக் காட்டி இருக்கிறது.

தமிழக அளவில் தற்போது அதிமுகவிற்கே வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ள நிலையில், தமிழகத்தில் ஆட்சி அமைப்பது அதிமுகவே என்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. இதனால் இவ்வளவு எதிர்ப்பு அலைகளையும் தாண்டி பெரம்பலூர் தொகுதியில் வெற்றி பெறப் போகும் தமிழ் செல்வனுக்கு, ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் பதவி கிடைத்துவிடும் என்பது மாநில அளவிலான அதிமுக வட்டாரத்தின் தகவல்.

## எரிவாயு பற்றாக்குறையால் வேலையிழப்பு: சூரத்திலிருந்து உ.பி, பிஹார் திரும்பும் தொழிலாளர்கள்



புது டெல்லி, ஏப்.21-

எரிவாயு பற்றக்குறையால் சூரத்தில் வேலை இழந்த உத்தரப் பிரதேசம், பிஹார் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊருக்கு திரும்புகின்றனர். வீடு திரும்புபவர்கள் ரயில் நிலையத்தில் 14 மணி நேரம் வரிசையில் நிற்கும் காட்சிகள் இப்போது வைரலாகின்றன.சத் மற்றும் ஹோலி பண்டிகை காலத்தைப் போல, உ.பி, பிஹார்வாசிகள் சூரத் ரயில் நிலையத்தில் ரயில்களுக்காகத் காத்திருக்கின்றனர். இதற்காக அனைவரும் கொளுத்தும் வெயிலில் நேற்று 14 மணி நேரம் வரை வரிசையில் காத்திருந்தனர். சூரத்தின் உத்னா ரயில் நிலையத்தில் திரண்டிருந்த பிரம்மாண்டமான கூட்டத்தைக் காட்டும் பல காட்சிப்பதிவுகள் சமூக ஊடகங்களில் வைரலாகின்றன. மிகுந்த துயரங்களுடன் காத்திருந்தவர்களின் கூட்டத்தைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் திணறினர்.ஊர் திரும்பும் தொழிலாளர்கள் தடுப்புகளை உடைத்துக் கொண்டு எப்படியாவது ரயில் நிலையத்துக்குள் நுழைந்துவிட வேண்டும் என்ற அவசரத்தில் இருந்தனர். இந்தச் சூழலுக்கு மத்தியில், கூட்டத்திலிருந்த ஒரு தொழிலாளி, “நண்பா, நான் இனிமேல் இங்கு வரவே மாட்டேன்,” என்று வேதனையுடன் கூறுவதும் வைரலாகிறது.40 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில், கைகளில் பைகளுடன் மக்கள் மணிக்கணக்கில் வரிசையில் காத்து நிற்கின்றனர். போதுமான உணவு, தண்ணீர் கிடைக்காதவர்களுக்கு கழிப்பறை வசதிகள்கூட அங்கு முறையாகச் செய்யப்படவில்லை. இதனால், பலரது உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அச்சமூட்டுவதாக மாறிய இச்சூழலில், பல மணிநேரம் வரிசையில் நின்றிருந்த பெண்கள், தங்கள் குழந்தைகளுடன் மன உளைச்சலில் காணப்பட்டனர்.

தள்ளுமுள்ளுக்கு மத்தியில் பல குழந்தைகளின் அழுகுரலும் அடங்கவில்லை. ஆரம்பத்தில், 8000க்கும் மேற்பட்ட பயணிகளுக்கு இரண்டு ரயில்கள் மட்டுமே இயக்கப்பட்டதாகவும், இது திடீரெனக் கூட்ட நெரிசலை அதிகரித்ததாகவும் கூறப்படுகிறது. ஆனால், 6 சிறப்பு ரயில்கள் நாள் முழுவதும் சுமார் 21,000 பயணிகளை ஏற்றிச் சென்றதாக மேற்கு ரயில்வே அதிகாரிகள் கூறுகின்றனர்.மேலும், உத்னாவிலிருந்து ஜெயநகருக்கு இரவில் ஒரு கூடுதல் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது. பாந்த்ராகோரக்பூர் மற்றும் வல்சாத்மவ் போன்ற ரயில்களுக்கு உத்னாவில் கூடுதல் நிறுத்தங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கூட்டத்தைக் கருத்தில் கொண்டு இது முன்கூட்டியே திட்டமிடப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

## இஸ்ரேல் உடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஸ்பெயின் வலியுறுத்தல்





ஜிப்ராலியோன், ஏப்.21-

இஸ்ரேல் உடனான கூட்டமைப்பு ஒப்பந்தத்தை ஐரோப்பிய ஒன்றியம் 48 மணி நேரத்துக்குள் முறித்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப் போவதாக ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் தெரிவித்துள்ளார்.சோசலிஸ்ட் தொழிலாளர் கட்சியின் பேரணியில் உரையாற்றிய பெட்ரோ சான்செஸ், “இஸ்ரேல் உடனான தனது கூட்டமைப்பை இந்த செவ்வாய்க் கிழமைக்குள் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்ற முன்மொழிவை ஸ்பெயின் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கும்.

ஸ்பெயின், இஸ்ரேலின் நண்பன்தான். ஆனால், அந்த நாடு தனது நடவடிக்கைகளைப் பகிர்ந்து கொள்வதில்லை. எனவே, ஸ்பெயின் முன்னெடுக்கும் இந்த கோரிக்கையில் மற்ற ஐரோப்பிய நாடுகளும் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் மிகவும் கொடூரமானது. நாடுகளுக்கு இடையேயான உறவில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகக் கொள்கைகளுக்கான மரியாதை மிகவும் முக்கியம்.இவ்விஷயத்தில் இஸ்ரேல் இதை கருத்தில் கொள்ளவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்துடனான இஸ்ரேலின் உறவுக்கு அடிப்படையாக இருக்கும் ஒப்பந்தத்தின் பல விதிகளை அந்த நாடு காலில் போட்டு மிதிக்கிறது. எனவேதான், இஸ்ரேலுக்கு எதிராக ஒரு ராஜதந்திர போரை ஸ்பெயின் நடத்துகிறது” என தெரிவித்துள்ளார். ஸ்பெயினின் தற்போதைய நிலைப்பாட்டை இதற்கு முன் பெல்ஜியம், சுலோவீனியா, ஃபின்லாந்து, பிரான்ஸ், அயர்லாந்து, லக்சம்பர்க், போர்ச்சுக்கல், ஸ்வீடன் ஆகிய நாடுகள் ஆதரித்தன. அதே நேரத்தில், பல்கேரியா, குரோஷியா, சைப்ரஸ், ஜெர்மனி, கிரீஸ், ஹங்கேரி, இத்தாலி, லுத்வேனியா ஆகிய நாடுகள் எதிர்த்தன.

இஸ்ரேல் ஐரோப்பிய ஒன்றியம் இடையேயான வர்த்தக மதிப்பு 45 பில்லியன் யூரோவுக்கும் அதிகம். எனவே, இரு தரப்புக்கும் இடையேயான ஒப்பந்தத்தை நிறுத்துவதோ அல்லது முறிப்பதோ பெரும் பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகளை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகிறது



■ மதுரை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சித்திரை திருவிழா இரண்டாம் நாள் காலை தங்க சப்பரத்தில் மாசி வீதிகளில் வீதி உலா வந்தார்.

## குரூப் 1 தேர்வில் சுப்பிரமணியன் மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை

சங்கரன் கோவில், ஏப்.21-

சங்கரன் கோவிலில் குரூப் 1 தேர்வில் சுப்பிரமணியன் மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.



செங்குந்தர் சமுதாயத்தை சேர்ந்த நெசவாளர் குடும்பத்தின் மைந்தர் சுப்பிரமணியன் நடந்து முடிந்துள்ள குரூப் 1 தேர்வில் மாநில அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். சங்கரன் கோவில் மண்ணின் மைந்தர் சுப்பிரமணியனுக்கு Ln.P.G.P.இராமநாதன் மாவட்ட செயலாளர் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் நிறுவனர் சாரதி ராம் அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## அட்சய திருதியை முன்னிட்டு நகைக் கடைகளில் குவிந்த மக்கள்



சென்னை, ஏப்.21-

அட்சய திருதியை ஒட்டி, நகைக்கடைகளில் பொதுமக்கள் குவிந்தனர். பெரும்பாலோர் எடை குறைவான தங்க ஆபரணங்கள், நாணயங்களை வாங்க ஆர்வம் காட்டினர்.அட்சய திருதியை நாளில் தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் வாங்குவது பொதுமக்களின் வழக்கமாக உள்ளது. இந்த ஆண்டுக்கான அட்சய திருதியை நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, தமிழகம் முழுவதும் நகைக் கடைகளில் பொது மக்கள் குவிந்தனர்.

சென்னையில் தி. நகர், புரசைவாக்கம், பாரிமுனை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள கடைகளில் காலை முதலே மக்கள் ஆர்வமாக நகைகளை வாங்கினர். இது குறித்து, நகை வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது: அட்சய திருதியை கொண்டாட்டத்தையொட்டி, தமிழகம் முழுவதும் 35 ஆயிரம் நகைக் கடைகள் காலை 8 மணிக்கே திறக்கப்பட்டன. தியாகராய நகரில் உள்ள நகைக் கடைகளில் வழக்கமான மக்கள் கூட்டம் காணப்பட்டது.அதேநேரத்தில், எடை குறைந்த ஆபரணங்கள், நாணயங்களை அதிக அளவில் வாங்கினர். இருப்பினும், கடந்த ஆண்டை விட மக்கள் வருகை சற்று குறைவாக இருந்தது. இதற்கு காரணம். தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தான். தேர்தல் விதிமுறைகள் காரணமாக, பணத்தை எடுத்து வரமுடியாது என்ற பயம் இருக்கிறது. இரண்டு நாள் அட்சய திருதியை இருப்பதால், திங்கள்கிழமையும் நகைகளை வாங்க வருவார்கள் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## ஆந்திராவில் உள்ள சுரங்கத்தில் ஆண்டுக்கு 1,000 கிலோ தங்கம் உற்பத்தி செய்ய இலக்கு



கர்னூல், ஏப்.21-

ஆந்திராவின் கர்னூல் மாவட்டம் ஜோனாகிரி தங்கச் சுரங்க திட்டம் அடுத்த மாதம் செயல்பாட்டுக்கு வருகிறது. நாட்டின் முதல் மிகப் பெரிய தனியார் தங்கச் சுரங்கம் திட்டத்தில் ஆண்டுக்கு 1,000 கிலோ தங்கம் உற்பத்தி செய்யப்பட உள்ளது.

இந்தியா தற்போது ஆண்டுக்கு 800 டன்னுக்கு மேல் தங்கத்தை இறக்குமதி செய்து வருகிறது. கர்நாடகாவின் கோலார் தங்கச் சுரங்கம் கடந்த 2000ம் ஆண்டு மூடப்பட்ட நிலையில், தற்போது கர்நாடகாவின் ராய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள ஹட்டி தங்கச் சுரங்கத்தில் மட்டும் ஆண்டுக்கு 1.5 டன் தங்கம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில் ஆந்திராவின் கர்னூல் மாவட்டத்தில் ஜோனாகிரி, எர்ராகுடி மற்றும் பகிதிராயி கிராமங்களில் 598 ஹெக்டேர் பரப்பில் புதிய தங்க வயல் கண்டறியப்பட்டுள்ளது. இங்கு 13.1 டன் முதல் 42.5 டன் அளவுக்கு தங்கம் எடுக்கலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இங்கு ஜியோமிசோர் சர்வீஸஸ் இந்தியா என்ற தனியார் நிறுவனம் ரூ.400 கோடிக்கு மேல் முதலீடு செய்து தங்கச் சுரங்கம் அமைத்து வருகிறது.

இந்த தங்கச் சுரங்கத்தில் அடுத்த மாதம் உற்பத்தி தொடங்கவுள்ளது. இதை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். இங்கு ஆண்டுக்கு 1000 கிலோ தங்கம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் இந்தியாவின் தங்கம் இறக்குமதி குறையும்.

ஜோனாகிரி தங்கச் சுரங்கத் திட்டம் வெற்றி பெற்றால், இன்னும் பல முதலீட்டாளர்கள் தங்கச் சுரங்க திட்டத்தில் முதலீடு செய்வர், அடுத்த 10 ஆண்டுகளில் 50 முதல் 100 டன் தங்கம் உற்பத்தி செய்ய இந்தியா திட்டமிட வேண்டும் என ஜியோமிசோர் நிறுவனத்தின் இயக்குனரும், டெக்கான் கோல்ட் நிர்வாக இயக்குனருமான டாக்டர் ஹனுமன் பிரசாத் கூறியுள்ளார்.



## உக்ரைன் போரால் ரஷ்யாவுக்கு தினமும் ரூ.926 கோடி இழப்பு

மாஸ்கோ, ஏப்.21-

உக்ரைன் ட்ரோன்கள் மூலம் நடத்தும் தாக்குதலால் ரஷ்யாவுக்கு தினமும் ரூ.926 கோடி இழப்பு ஏற்படுகிறது.

ரஷ்யாவுக்கு அதிக வருவாய் ஈட்டித் தரும் தொழில் கச்சா எண்ணெய் விற்பனையும் முக்கியமானது. அதனால், ரஷ்யாவின் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு மையங்கள், சேமிப்பு கிடங்குகள், துறைமுகங்கள் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகிறது.

ரஷ்யாவில் உள்ள 10 பெரிய கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் டுவாப்சி சுத்திகரிப்பு நிலையம், ரோஸ்நெஃப்ட் சுத்திகரிப்பு மையம் ஆகியவையும் அடங்கும். இங்கு உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்துவதால் தீ விபத்துகள் ஏற்பட்டு அருகில் உள்ள சேமிப்பு கிடங்குகளுக்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கச்சா எண்ணெய் ஏற்றுமதி நடைபெறும் ரஷ்யாவின் பிரிம்மோர்ஸ்க், உஸ்ட்லுகா, ஷேஸ்க்ஹரிஸ் மற்றும் டுவாப்சி ஆகிய பகுதிகள் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்துகிறது. இதன் காரணமாக ரஷ்யாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதி 8,80,000 பேரல்கள் குறைந்து, நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் டாலர் (ரூ.926 கோடி) இழப்பு ஏற்படுவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

## சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை போக்க எல்பிஜியில் 20% டிஎம்இ காஸ் கலக்க திட்டம்

புதுடெல்லி, ஏப்.21-

சமையல் காஸ் தட்டுப்பாட்டை போக்க எல்பிஜி காஸில் 20 சதவீதம் டிஎம்இ காஸை கலக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் 85 சதவீதம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இதேபோல நாட்டின் எல்பிஜி சமையல் காஸ் 60 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், சமையல் காஸுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.சமையல் காஸ் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண உள்நாட்டில் எல்பிஜி உற்பத்தி அதிகரிக்கப்பட்டு உள்ளது. மேலும் அமெரிக்கா, அங்கோலா உள்ளிட்ட நாடுகளில் இருந்து எல்பிஜி காஸ் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. ஏற்கெனவே நாடு முழுவதும் பெட்ரோலில் 20 சதவீதம் அளவுக்கு எத்தனால் கலப்பது கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. இதன்மூலம் கச்சா எண்ணெய் இறக்குமதி கணிசமாக குறைந்து, பெட்ரோல் தட்டுப்பாடு பிரச்சினைக்கும் எளிய முறையில் தீர்வு காணப்பட்டு உள்ளது.இதேபோல எல்பிஜி சமையல் காஸில் 20 சதவீதம் டிஎம்இ காஸை கலக்க மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. இதன் மூலம் எல்பிஜி இறக்குமதியை கணிசமாக குறைக்க முடியும் என்று பெட்ரோலியத் துறை தெரிவித்துள்ளது. டைமெத்தைல் ஈதர் (டிஎம்இ) என்பது ஒரு செயற்கை எரிவாயு. இயற்கை எரிவாயு, நிலக்கரி வாயுவாக்கம் ஆகியவற்றின் மூலம் டிஎம்இ காஸ் உற்பத்தி செய்யப்படுகிறது.இது தூய்மையான எரிவாயு ஆகும். எல்பிஜி உடன் ஒப்பிடும்போது டிஎம்இ காஸ் எரியும்போது புகை, நைட்ரஜன் ஆக்ஸைடு, கந்தக ஆக்ஸைடு ஆகியவை மிகக் குறைவாக வெளியேறும். மும்பையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நியூ ஏரா கிளீன்டெக் சொல்யூஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் நிலக்கரி வாயுவாக்கம் மூலம் டிஎம்இ காஸை உற்பத்தி செய்து வருகிறது.இதேபோல மகாராஷ்டிராவின் புனேவை சேர்ந்த மத்திய அரசின் சிஎஸ்ஐஆர் என்சிஎல் நிறுவனம், மெத்தனாலில் இருந்து டிஎம்இ காஸை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்து உள்ளது.தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த தமிழர் தலைமையிலான குழு:

மகாராஷ்டிராவின் புனே நகரில் மத்திய அரசின் சிஎஸ்ஐஆர் என்சிஎல் நிறுவனம் செயல்படுகிறது. அங்கு முதன்மை விஞ்ஞானியாக உள்ள தமிழகத்தின் பவானி பகுதியை சேர்ந்த ராஜா திருமலைச்சாமி தலைமையிலான குழு மெத்தனாலில் இருந்து டிஎம்இ காஸை தயாரிக்கும் தொழில்நுட்பத்தை கண்டறிந்து உள்ளது.இதுகுறித்து ராஜா திருமலைச் சாமி கூறும்போது, “மெத்தனாலில் இருந்து டிஎம்இ காஸை தயாரிப்பது தொடர்பாக 5 காப்புரிமைகளை பெற்றிருக்கிறோம். பின்லாந்து, கானா உள்ளிட்ட 4 நாடுகள் எங்களிடம் தொழில்நுட்ப உதவியை கோரி உள்ளன” என்று தெரிவித்தார்

## ஜப்பானில் 7.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை விடுப்பு



டோக்கியோ,ஏப்.21-

ஜப்பானின் வடகிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் இன்று 7.5 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த நிலநடுக்கத்தை அடுத்து குஜி துறைமுகத்தில் 80 சென்டி மீட்டர் உயரத்துக்கு சுனாமி அலைகள் ஏற்பட்டதாகவும் அது கூறியுள்ளது. இது தொடர்பாக ஜப்பானிய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “உள்ளூர் நேரப்படி இன்று (திங்கள்கிழமை) மாலை 4.53 மணிக்கு ஜப்பானின் மியோகோவுக்கு 100 கிலோ மீட்டர் கிழக்கு வட கிழக்கே 7.5 ரிக்டர் அளவுக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஜப்பானிய நில அதிர்வு அளவுகோல்படி அதிகபட்ச உயர் அளவு 7 எனும் நிலையில், இந்த நிலநடுக்கத்தின் அளவு 5 ஆக பதிவாகி உள்ளது. 10 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ஆரம்பத்தில் 7.4 ஆக மதிப்பிடப்பட்டாலும் பின்னர் அது 7.5 ஆக அதிகரிக்கப்பட்டது.

இதே அளவிலான நிலநடுக்கங்கள் ஒரு வாரத்துக்கு ஏற்படக்கூடும். இந்த நிலநடுக்கம் காரணமாக ஹொக்கைடோ, அமோரி, இவாடே மாகாணங்களின் பசுபிக் கடற்கரைகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 3 மீட்டர் உயரம் வரையிலான சுனாமி அலைகள் உடனடியாக வரக்கூடும்” என தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக, அமோரி மற்றும் மியாகி மாகாணங்களில் உள்ள ஹிகாஷிடோரி மற்றும் ஒனாகவா அணுமின் நிலையங்களிலும், புகுஷிமா மாகாணத்தில் உள்ள புகுஷிமா டாய்ச்சி மற்றும் டைனி அணுமின் நிலையங்களிலும் எந்த அசாதாரண நிகழ்வுகளும் பதிவாகவில்லை என அவற்றின் இயக்குநர்கள் தெரிவித்துள்ளதாக கியோடோ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தை அடுத்து தனது அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ஜப்பான் பிரதமர் சானே டகாய்ச்சி, நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை உயரமான இடங்களுக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளதாகக் கூறினார். டோக்கியோ மற்றும் ஷின் அமோரி நிலையங்களுக்கு இடையேயான டோஹோகு புல்லட் ரயில் சேவைகளை நிறுத்திவைத்துள்ளதாக ஜே.ஆர். ஈஸ்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது

# விருதுநகர் பட்டாசு ஆலை வெடி விபத்து: ஐகோர்ட் கிளை தாமாக முன்வந்து விசாரிக்க முறையீடு



மதுரை, ஏப்.21-

விருதுநகர் பட்டாசு ஆலை வெடிவிபத்து தொடர்பாக தாமாக முன்வந்து விசாரிக்க உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் முறையீடு செய்யப்பட்டது.

விருதுநகர் கட்டனார்பட்டி பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், பட்டாசு ஆலை விபத்து தொடர்பான வழக்கை நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க கோரி மதுரை அமர்வில் வழக்கறிஞர் கருணாநிதி முறையீடு செய்தார்.

நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இந்த முறையீடு முன்வைக்கப்பட்டது. தேர்தல் காலம் என்பதால் யாரும் அப்பகுதிக்கு சென்று பார்க்கவில்லை. உரிய இழப்பீடும் வழங்கப்படவில்லை" எனத் வழக்கறிஞர் கூறினார்.

அதற்கு நீதிபதிகள், "ஏற்கனவே இது தொடர்பான வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் அரசுக்கு பதில் அளிக்க நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. சரியான வழிகாட்டுதல்கள் தேவை. ஏன் இழப்பீடு இன்னும் வழங்கப்படவில்லை ?" என கேள்வி எழுப்பினர்.

அப்போது அரசுத் தரப்பில், "தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளது. முதன்மைச் செயலர் உள்ளிட்ட அலுவலர்கள் மாற்றப்பட்டுள்ளனர். விளக்கம் பெற்று தெரிவிக்க கால அவகாசம் வேண்டும்" என தெரிவித்தார்.

அதனை ஏற்ற நீதிபதிகள், இழப்பீடு வழங்குவது தொடர்பாக அரசிடம் உரிய விளக்கம் பெற்று தெரிவிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஏப்ரல் 21ம் தேதிக்கு (நாளை) ஒத்திவைத்தனர்.

பலி 25 ஆக அதிகரிப்பு: விருதுநகர் அருகே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் காயம் அடைந்து தீவிர சிகிச்சை பெற்று வந்த மேலும் 2 பெண்கள் சிகிச்சை பலனின்றி இன்று (திங்கள் கிழமை) காலை உயிரிழந்தனர். இதையடுத்து பலி எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது.

# “தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணி எளிதில் வெற்றி பெறும்” ப.சிதம்பரம்



காரைக்குடி, ஏப்.21-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி மிக எளிதாக வெற்றி பெறும் என்று ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு காரைக்குடியில் ஏஎன்ஐ செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்த காங்கிரஸ் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ப. சிதம்பரம், “தமிழகத்தில் தற்போதைய தேர்தல் உட்பட கடந்த 4 தேர்தல்களில் திமுக தலைமையிலான கூட்டணி சோதிக்கப்பட்டுள்ளது. இந்த 4 தேர்தல்களிலும் இந்தக் கூட்டணி மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு கூட்டணியாக உள்ளது. 2019 மக்களவைத் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றோம்.

2021 சட்டப்பேரவைத் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றோம். 2024 மக்களவைத் தேர்தலில் 39 தொகுதிகளிலும் நாங்கள் வெற்றி பெற்றோம். இந்த சட்டப்பேரவைத் தேர்தலிலும் திமுக தலைமையிலான கூட்டணி மிக எளிதாக வெற்றி பெறும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்” என தெரிவித்தார்.மகளிருக்கான இட ஒதுக்கீடு சட்டத் திருத்த மசோதாவை திமுகவும் அதன் கூட்டணி கட்சிகளும் மக்களவையில் தோற்டித்ததன் மூலம், மகளிருக்கான 33% இட ஒதுக்கீட்டை தடுத்துவிட்டதாக எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டி இருப்பது குறித்த கேள்விக்கு பதில் அளித்த ப. சிதம்பரம், “அறியாமையின் காரணமாகவே அவர் அத்தகைய கருத்தை தெரிவித்துள்ளார். அது முற்றிலும் தவறான கருத்து. அது ஒரு அப்பட்டமான பொய். பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா ஏற்கெனவே அரசியலமைப்பின் ஒரு பகுதியாக நிறைவேற்றப்பட்டு உள்ளது. இதற்கான 106 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் 2023 ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலேயே மக்களவை மற்றும் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

அது இப்போது அரசியலமைப்பின் ஓர் அங்கமாகவே உள்ளது. அரசியலமைப்புச் சட்டம் அனைத்து மாநில மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் சரத்து 344கி வை அறிமுகப்படுத்திய அந்த 106வது அரசியலமைப்பு திருத்த மசோதாவையாவது அவர் படித்துப் பார்க்க வேண்டும். அவர் கூறுவது முற்றிலும் தவறு. ஆனால், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கவில்லை என்று அவர் தொடர்ந்து கூறுவாரானால் அது ஒரு அப்பட்டமான பொய்.

106 வது அரசியலமைப்புத் திருத்தத்தை பிரதமர் அறிமுகப்படுத்தினார். நாங்கள் அதை நிறைவேற்றினோம். அது இப்போது அரசியலமைப்பின் ஒரு பகுதியாக உள்ளது. அவர் இப்போது 344கி பிரிவை இல்லை என்கிறாரா? அவர் ஏன் இந்த பிரிவை வாசித்துவிட்டு பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றவில்லை? அவர் 344கி பிரிவை வாசிப்பதும் இல்லை; அதை குறிப்பிடுவதும் இல்லை.தற்போதுள்ள 543 தொகுதிகளில் மூன்றில் ஒரு பங்கு இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படும் என்று அந்த பிரிவு தெளிவாகக் கூறுகிறது. அதாவது 181 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அவர் இதை உடனடியாக அமல்படுத்த முடியும். இந்த மாநில தேர்தலில் இல்லாவிட்டாலும் 2029ம் ஆண்டில் அவர் இதை உடனடியாக அமல்படுத்த முடியும்” என தெரிவித்தார்.

பாஜகவும் ஆர்எஸ்எஸ் அமைப்பும் தமிழ்நாட்டுக்குள் ஊடுருவ முயல்வதாக ராகுல் காந்தி கூறியது குறித்த கேள்விக்கு பதில் அளித்த ப. சிதம்பரம், “தமிழ்நாட்டின் கதவுகள் பாஜகவுக்கு எதிராக உறுதியாக மூடப்பட்டுள்ளன. பாஜக என்பது தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம், தமிழ் வரலாறு, தமிழ் மரபு, தமிழர்களின் அன்றாட நடைமுறைகளுக்கு முற்றிலும் எதிரானது. தமிழ்நாட்டு மக்கள் பாஜகவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்த முறையும்கூட பாஜக தலைமையிலான கூட்டணி தமிழ்நாட்டுக்குள் அனுமதிக்கப்பட மாட்டாது” என தெரிவித்தார்.

# டெல்டா, தென் கடலோர மாவட்டங்களில் ஏப்.26 வரை மழை வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்



சென்னை, ஏப்.21-

தமிழகத்தில் டெல்டா மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் நாளை முதல் ஏப்.26 ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தெலங்கானா முதல் குமரிக்கடல் வரை ராயலசீமா மற்றும் உள் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை சுமார் 1.5 கிமீ உயரம் வரை நிலவுகிறது. இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) நாளை (ஏப்.21) லேசான மழையும், 22 முதல் 26ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

உள் தமிழக மாவட்டங்களில் நாளை முதல் 24ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அதிகமாக இருக்கக்கூடும்.

கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும்.சென்னை மற்றும்புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# போரில் இதுவரை 3,375 பேர் உயிரிழப்பு: ஈரான் தடயவியல் துறைத் தலைவர் தகவல்




தெஹ்ரான், ஏப்.21-

ஈரானுக்கும் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்கும் இடையிலான போரில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்த புதிய எண்ணிக்கையை ஈரான் வெளியிட்டுள்ளது. இப்போரில் இதுவரை 3,375 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஈரானின் தடயவியல் துறைத் தலைவர் அப்பாஸ் மஸ்ஜெதி தெரிவித்தார்.

ஈரான் நீதித்துறையின் ‘மிசான்’ செய்தி நிறுவனம் மற்றும் பிற ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், ஈரான் தடயவியல் அமைப்பின் தலைவரான அப்பாஸ் மஸ்ஜெதி இந்த தகவலை தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, உயிரிழந்தவர்களில் நால்வர் மட்டுமே இன்னும் அடையாளம் காணப்படாமல் உள்ளனர் என மஸ்ஜெதி கூறினார்.

அவர் அளித்த தகவல்களில், உயிரிழந்தவர்களில் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை குறித்த தனித்தனி விவரங்கள் இடம்பெறவில்லை. அதே நேரத்தில், உயிரிழந்தவர்களில் 2,875 பேர் ஆண்கள் என்றும், 496 பேர் பெண்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், உயிரிழந்தவர்களில் 383 பேர், 18 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் என்றும் மஸ்ஜெதி தெரிவித்தார்.

இந்த சூழலில், ஹார்முஸ் ஜலசந்திக்கு அருகே ஈரானின் சரக்குக் கப்பல் ஒன்றை அமெரிக்கா கைப்பற்றியுள்ளதால் மீண்டும் பதற்றம் உருவாகியுள்ளது.

கடந்த வாரம் ஈரான் துறைமுகங்கள் மீது கடற்படை முற்றுகையை அறிவித்த பிறகு, அமெரிக்கா மேற்கொண்ட முதல் கைப்பற்றும் நடவடிக்கை இதுவாகும். அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை கடற்கொள்ளைச் செயல் என்றும், போர்நிறுத்த ஒப்பந்த மீறல் என்றும் ஈரான் குறிப்பிட்டுள்ளதுடன், இதற்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

மேலும், அமெரிக்க நடவடிக்கையானது, தற்போதைய போர் நிறுத்தத்தின் நிலைத்தன்மை குறித்த கவலைகளை எழுப்பியுள்ளது. மேலும், உலகளாவிய எரிபொருள் விநியோகத்தில் நீண்டகாலத் தடை ஏற்படக்கூடும் என்ற அச்சத்தின் காரணமாக, கச்சா எண்ணெய் விலையும் உயர்ந்துள்ளன.

# வெளிச்சத்துக்கு வந்த ஸ்டாலின் ராகுல் சண்டை: பியூஷ் கோயல் விமர்சனம்

சென்னை, ஏப்.21-

ஸ்டாலினும், ராகுல்காந்தியும் ஒரே மேடையில் ஏறக் கூடத் தயாராக இல்லை, அவர்களுக்குள் நடக்கும் சண்டை வெளிச்சத்துக்கு வந்துவிட்டது என மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் விமர்சித்துள்ளார்.



தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான பியூஷ் கோயல் சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: பிரதமர் மோடியின் சீரிய முயற்சியால் 2023 ல் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்டது.

மக்களவை இடங்களை அதிகரித்து, அதில் மூன்றில் ஒரு பங்கு அதாவது சுமார் 272 முதல் 273 இடங்களை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய அவர் முயற்சி மேற்கொண்டார். ஆனால், திமுக மற்றும் காங்கிரஸின் சுயநல அரசியலால் இந்தத் திருத்தங்களை எங்களால் நிறைவேற்ற முடியவில்லை.

ஸ்டாலின் குடும்பமும் திமுகவும் பெண்களுக்கு இந்த உரிமை கிடைக்காமல் தடுத்ததை பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடுகிறார்கள். தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை தமிழக பெண்கள் மறக்கமாட்டார்கள். ஸ்டாலின் ஒரு பொய்யர். பொய்யான தகவல்களைப் பரப்புவதற்காக அவர் தமிழகப் பெண்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

பாஜக மற்றும் ஆர்எஸ்எஸ் தமிழகத்தை கைப்பற்றப் பார்ப்பதாக ராகுல் காந்தி கூறுகிறார். முதலில் ராகுல் காந்தியும் ஸ்டாலினும் ஒரே மேடையில் ஏறக்கூடத் தயாராக இல்லை. அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். அவர்களுக்குள் நடக்கும் சண்டை இப்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

ஸ்டாலின் தனது மகன் உதயநிதியை முதல்வராக்க மட்டுமே இந்தத் தேர்தலைச் சந்திக்கிறார். தமிழ் கலாசாரத்தையும், சனாதன தர்மத்தையும் மதிக்கத் தெரியாத உதயநிதி ஒருபோதும் முதல்வராக முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஜம்மு காஷ்மீரில் பேருந்து கவிழ்ந்து விபத்து: 22 பேர் உயிரிழப்பு



உதம்பூர், ஏப்.21-

ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில் இன்று காலை பயணிகள் பேருந்து ஒன்று சாலையில் இருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்ததில் 22 பேர் உயிரிழந்தனர். 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் பலர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

ராம்நகரிலிருந்து உதம்பூரை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து, காலை சுமார் 10 மணியளவில், வளைவு ஒன்றில் திருப்பும்போது கட்டுப்பாட்டை இழந்து, மலையோரப் பள்ளத்தாக்கில் விழுந்தது.

இவ்விபத்தைத் தொடர்ந்து, ராணுவம், காவல்துறை மற்றும் உள்ளூர் மக்கள் அடங்கிய மீட்புக் குழுவினர் இணைந்து, காயமடைந்தவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவ்விபத்தில் காயமடைந்த பல பயணிகள் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர்; இவர்களில் பலர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.இந்தத் விபத்து குறித்து இரங்கல் தெரிவித்த குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, “ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் பலர் உயிரிழந்தது குறித்து அறிந்து நான் ஆழ்ந்த துயரம் அடைந்தேன். இந்தத் துயரச் சம்பவத்தில் தங்கள் உயிரை இழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் துயர சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, “ஜம்மு காஷ்மீரின் உதம்பூரில் நிகழ்ந்த பேருந்து விபத்தில் பலர் உயிரிழந்தது குறித்து அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன். தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறேன்” என்று தெரிவித்தார்இந்த விபத்து குறித்துப் பேசிய ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா, “துயரம் நிறைந்த இந்த நேரத்தில், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அரசு உறுதுணையாக நிற்கும். அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது,” என்றார்.

# குண்டுவெடிப்பால் 2 குழந்தைகள் உயிரிழந்த விவகாரம்மணிப்பூரில் முழு அடைப்புப் போராட்டம் தீவிரம்




இம்பால், ஏப்.21-

மணிப்பூரில் கடந்த 7ம் தேதி நடந்த குண்டுவெடிப்பில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து மாநிலம் தழுவிய ஐந்து நாள் முழு அடைப்புப் போராட்டம் நேற்று தொடங்கியது. பல இடங்களில் போராட்டங்கள் வன்முறையாக மாறியதால் பதற்றம் அதிகரித்துள்ளது.

மணிப்பூரின் பிஷ்ணுபூர் பள்ளத்தாக்கு மாவட்டத்தில் கடந்த 7ம் தேதி நிகழ்ந்த குண்டுவெடிப்பில் ஐந்து வயது சிறுவனும், ஐந்து மாத பெண் குழந்தையும் உயிரிழந்தனர். இந்த சம்பவம் மாநிலம் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த சம்பவத்துக்குக் காரணமானவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைந்து நீதி வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி மாநிலத்தின பல பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், மீரா பைபிஸ் (பெண் தீப்பந்தம் ஏந்துவோர்) என்ற அமைப்பு உட்பட பல்வேறு சிவில் சமூக அமைப்புகள் இணைந்து உருவாக்கிய மக்கள் கூட்டமைப்பு மூலம் ஐந்து நாள் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த போராட்டம் நேற்று தொடங்கியது. மணிப்பூரின் மலை மாவட்டங்களில் செயல்படும் குக்கி தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

போராட்டத்தின் முதல் நாளான நேற்று சந்தைகள், கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், போக்குவரத்துச் சேவை ஆகியவை முடங்கின. சில பகுதிகளில் அத்தியாவசியச் சேவைகள் மட்டும் இயங்கின. மெய்த்தி சமூகத்தவர்கள் அதிகம் வசிக்கும் பள்ளத்தாக்கு மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு இம்பால், மேற்கு இம்பால் மாவட்டங்களில் உள்ள பல்வேறு இடங்களில் இரவு நேரப் பேரணிகளும் நடந்தன. காக்சிங் மாவட்டம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. போராட்டக்காரர்களைக் களைக்க பல இடங்களில் பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மணிப்பூரில் தொடர்ந்து பதற்றம் நிலவுவதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. வாகனச் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் நடத்தப்படும் பேரணிகளில் போராட்டக்காரர்களோடு சமூக விரோதிகள் ஊடுருவி வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதாகவும், பாதுகாப்புப் படையினர் மீது பெட்ரோல் குண்டுகளை வீசுவதாகவும் தெரிவித்துள்ள மணிப்பூர் போலீஸார், வன்முறைச் செயல்களில் ஈடுபடுவோர் மீதும் தூண்டுவோர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளனர்.

இதனிடையே, சமூக ஊடகங்கள் மூலம் பதற்றத்தைத் தூண்டியதாக லம்யான்பா மேத்தி (23) என்ற இளைஞரை கைது செய்துள்ள போலீசார், பலரை தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

## வாக்களிப்போம்.. நதி மீட்போம்!” - நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் முக்கிய வேண்டுகோள்!..




திருப்பூர் ஏப். 21-

திருப்பூரின் உயிர்நாடியான நல்லாற்றை மீட்டெடுத்து, அதனை மீண்டும் ஒரு நீர் ஓடும் ஆறாக மாற்றும் நோக்கில் செயல்பட்டு வரும் நல்லாறு பாதுகாப்பு இயக்கம், தற்போது ஒரு முக்கியமான தேர்தல் கால அறிக்கையை வெளி யிட்டுள்ளது.

*வேட்பாளர்களிடம் கோரிக்கை:*நடப்பு சட்டமன்றத் தேர்தல் சூழலில், அவிநாசி மற்றும் திருப்பூர் வடக்கு தொகுதிகளில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களையும் இயக்கத்தின் நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர். அப்போது, நல்லாற்றைப் பாதுகாக்கவும், தூர்வாரிச் சீரமைக்கவும் வலியுறுத்தி கோரிக்கை மனுக்களை வழங்கினர். மனுவைப் பெற்றுக்கொண்ட அனைத்து வேட்பாளர்களும், தாங்கள் வெற்றி பெற்றால் நல்லாற்றைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளனர்.

*இயக்கத்தின் வேண்டுகோள்:*இது குறித்து இயக்கத்தின் சார்பில் விடுக்கப்பட்டுள்ள செய்தியில், "நல்லாற்றை பழைய நிலைக்குக் கொண்டு வரும் கடமை நம் அனைவருக்கும் இருக்கிறது. அந்த அடிப்படையில், வருகிற 23042026 அன்று நடைபெறுகிற சட்டமன்றத் தேர்தலில் அனைவரும் தவறாமல் வாக்களித்து நமது ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும். வெற்றி பெற்று சட்டமன்றத்திற்குச் செல்லும் உறுப்பினர்கள், தங்களின் வாக்குறுதிப்படி நல்லாற்றைப் பாதுகாக்கும் கடமையைச் செய்வார்கள் என்று நாங்கள் முழுமனதுடன் நம்புகிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*நம்பிக்கையும் களப்பணியும்:*வெறும் கோரிக்கைகளோடு நிற்காமல், தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் மீது முழு நம்பிக்கை வைத்துத் தங்களது அடுத்தகட்டக் களப்பணிக்குத் தயாராகி வரும் 'நல்லாற்று நாயகர்களின்' இந்தச் செயல்பாடு, தொகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஒரு மக்கள் இயக்கம் வேட்பாளர்களுக்கு அழுத்தம் கொடுத்து உறுதிமொழி வாங்குவது என்பது ஜனநாயகத்தின் மிகப்பெரிய வெற்றி. ஏப்ரல் 23 தேர்தல் நெருங்கும் வேளையில் வாக்காளர்களுக்கு ஒரு தெளிவைத் தருவதோடு, வெற்றி பெறும் எம்.எல்.ஏக்களுக்கு ஒரு தார்மீகப் பொறுப்பையும் உணர்த்துகிறது.

# திருச்சி பிஜேபியில் கருப்பு ஆடுகள்...

## களை எடுக்குமா மாநில தலைமை?..


அஞ்சாநெஞ்சன்


லோகிதாசன்

திருச்சி, ஏப்.21-

பாரதிய ஜனதா கட்சியில் விசுவாசமாக உழைப்பதற்கு எவ்வளவோ ஆட்கள் இருந்தபோதிலும் ஆங்காங்கே சில கருப்பு ஆடுகள் இருக்கத்தான் செய்கிறது. இதற்கு உதாரணம் திருச்சி புறநகர் மாவட்டம்.

திருச்சி புறநகர் மாவட்டத்தில் தற்போதைய புறநகர் மாவட்ட தலைவராக இருக்கும் அஞ்சாநெஞ்சனும், முன்னாள் மாவட்ட தலைவர் லோகிதாசனும், திமுக அமைச்சர் நேருவின் அடிமைகள் என்பது வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்த ஒன்று. லோகிதாசன் ஏற்கனவே மாவட்ட தலைவராக இருக்கும் பொழுது திமுக அமைச்சர் நேரு சொல்வதை மட்டுமே கேட்டு செயல்படுவாராம். அந்த அளவிற்கு நேருக்கு நெருக்கமானவர் என்கிறார்கள்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பெரம்பலூர் பாராளுமன்றத்தில் பிஜேபி கூட்டணியில் பாரிவேந்தர் போட்டியிட்டார். தற்போதைய மாவட்ட தலைவர் அஞ்சாநெஞ் சனும், முன்னாள் மாவட்ட தலைவர் லோகிதாசனும் முடிந்த அளவிற்கு பணத்தை கறந்து விட்டனராம். ஆனால் வேலை செய்ததோ திமுக சார்பில் போட்டியிட்ட நேருவின் மகன் அருண் நேருவுக்கு.

கடந்த பாராளுமன்றத் தேர்தல் சமயத்தில் அவ்வப்போது தங்களுக்கு தேவையான பணத்தை பெற்றுக் கொண்டார்களே தவிர, பாரி வேந்தருக்கு வேலை செய்யாமல் லோகிதாசனும், அஞ் சாநெஞ்சனும் முழுக்க முழுக்க திமுகவிற்கு ரொம்பவே விசுவாசமாக இருந்தார்களாம். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பாரிவேந்தர் டெபாசிட் இழந்ததற்கான பெருமை இந்த இரண்டு ஜாம்பவான்களையே சாரும்.லோகிதாசனும் அஞ்சாநெஞ்சனும் நேருவின் கைப்பாவைகள் என்பது பிஜேபி கட்சியில் மட்டுமல்லாது, மற்ற கட்சியினருக்கும் தெரிந்த விஷயமே. கடந்த பாராளுமன்ற தேர்தலில் இறுதி கட்டத்தில் லோகிதாசன் பாரிவேந்தரிடம் பல "ல"கரங்களைப் பெற்றுக் கொண்டு வீட்டோடிருந்து கொண்டு திமுகவிற்கே டைரக்சன் கொடுத்தாராம்.

இதைவிட கொடுமை என்னவென்றால் நேருவின் உறவினரான அஞ்சா நெஞ்சன் வெளிப்படையாக திமுகவிற்கு வேலை செய்தாராம். லோகிதாசனிடம் கட்சிக்காரர்கள் பலர், "ஏன் இந்த மாதிரி பண்றீங்க, நம்ம கட்சிக்கு கொஞ்சமாவது விசுவாசமாக வேலை பார்க்கிறது இல்லையா", என்று கேட்டதற்கு "நான் திமுகவிற்கு தான் வேலை செய்வேன். நீ என்ன வேணாலும் பண்ணிக்கோ. தலைமைக்கு வேணும்னாலும் புகார் அனுப்பிக்கோ". என்று தெனாவட்டாக பேசி யிருக்கிறாராம்.தற்போது லால்குடி சட்டமன்ற தொகுதியில் பிரபல லாட்டரி அதிபர் மார்ட்டின் மனைவி அதிமுக கூட்டணி சார்பில் போட்டி யிடுகிறார். தற்போதும் லோகிதாசனும், அஞ் சாநெஞ்சனும் உணர்வு பூர்வமாக கூட்டணி கட்சிக்கு வேலை பார்க்காமல் அமைச்சர் நேருவின் சொல்படியே திமுகவிற்கு சப்போர்ட் பண்ணி வருகிறார்களாம்.

அஞ்சா நெஞ்சனுக்கு அதிமுக வேட்பாளர் லீமாரோஸ் சார்பாக ஆரம்பத்திலேயே கூட்டணிக் கட்சி செலவிற்காக ரூ 10 லட்சம் கொடுக்கப்பட்டதாம். ஆனால் இந்த 10 லட்சத்தில் ஒரு பைசா கூட கூட்டணி கட்சி பிஜேபிக்கு செலவு செய்யாமல், முழுமையாக அதை அபேஸ் செய்து விட்டாராம்.இதில் என்ன கொடுமை என்றால் , கொடுத்த 10 லட்சத்தை கட்சிக்கு செலவு செய்யாத அஞ்சாநெஞ்சன், இரண்டு நாட்களுக்கு முன்பு நீங்கள் கொடுத்த பணம் எல்லாம் கட்சிக்கு செலவு செய்து விட்டேன், மீண்டும் 20 லட்சம் வேண்டும் என்று வேட்பாளர் லீமாரோஸிடம் கேட்டு உள்ளாராம். அவரோ நீங்கள் எதுவும் செலவு செய்யவில்லை என்று கூறியதுடன், உங்க மாநிலத் தலைவரை பேச சொல்லுங்க தருகிறேன் என்று கறாராக கூறி கூறி விட்டாராம்.

திருச்சி புறநகர் பிஜேபியில் முன்னாள் மாவட்ட தலைவர் லோகிதாசனும் இந்நாள் மாவட்ட தலைவர் அஞ் சா நெஞ்சனும் திமுக அமைச்சர் நேருவின் அடிமைகளாக செயல்பட்டு வருவது மேலும் பிஜேபிக்கு தொய்வையே ஏற்படுத்தி வருகிறது. இவர்கள் இருவரும் திமுகவிற்கு ஜால்ரா போடுவதால் பிஜேபி யிலிருந்து உண்மையாக கட்சிக்கு உழைக்கும் பலர் கட்சியிலிருந்து வெளியேறி விட்டனர்.

மேலும் திருச்சி பிஜேபியில் உள்ள ஏகப்பட்ட உண்மை விசுவாசிகள், இவர்கள் இருவரின் கூத்தை சகித்துக் கொள்ள முடியாமல் ஒதுங்கி இருப்பதாக கூறப்படுகிறது. திருச்சி புறநகர் மாவட்டத்தில் பாரதிய ஜனதா கட்சியை திமுக அமைச்சர் நேருவிடம் அடமானம் வைத்து வரும் யோகிதாசனும், அஞ் சாநெஞ்சனும் பிஜேபியின் அடிப்படை உறுப்பினர் பதவிலிருந்து நீக்க வேண்டும் என்று திருச்சி புறநகர் பகுதிகளில் ஆங்காங்கே, குமுறல் சத்தம் ஒழித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு மேலும் இவர்களை கட்சி யிலிருந்து எடுக்காத பட்சத்தில், பிஜேபி கட்சியின் மாநில தலைமையகமான கமலாலயம், திருச்சி புறநகர் பிஜேபியினரால் முற்றுகையிடப்பட போகிறது என்பதே லேட்டஸ்ட் தகவல்..



■ தென்காசி இசிஈஅரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வில், 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி மாணவ, மாணவியர்களின் தேர்தல் விழிப்புணர்வு நடனத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப. பார்வையிட்டார்.




■ மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள வலையபட்டி மற்றும் அரசம்பட்டி கிராம பகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் சோழவந்தான் தொகுதி வேட்பாளர் கருப்பையா, பொதுமக்களிடம் விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். முன்னதாக கட்சி நிர்வாகிகள் அவருக்கு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றனர். இதில் வடக்கு ஒன்றிய நிர்வாகி கார்த்திக் மற்றும் இணைச் செயலாளர் ராமநாதன்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்ரு2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு காவல்துறை தேர்தல் பார்வையாளர் அஸ்வதி தூர்ஜே , மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார்,ஆகியோர் வடக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தில் வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளுக்கு தேர்தல் பணியாளர்களின் பயன்பாட்டிற்காகக் கொடுக்கப்பட வேண்டிய முக்கியப் பொருட்கள் மற்றும் ஆவணங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டனர்.

## சேலத்தில் எடப்பாடியைச் சந்தித்து ரஜினி ரசிகர்கள் அதிரடி ஆதரவு



சேலம்.ஏப்.21-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அரசியல் சூழல் நாளுக்கு நாள் சூடுபிடித்து வருகிறது. இந்த நிலையில், நடிகர் ரஜினிகாந்த் ரசிகர்கள் அதிமுகவிற்கு ஆதரவு அளிப்பதாக அறி வித்திருப்பது அரசியல் வட்டாரத்தில் கவனத்தை ஈர்த்துள்ளது.சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இல்லத்தில், ரஜினி ரசிகர்கள் குழுவாக நேரில் சந்தித்து தங்களின் ஆதரவை தெரிவித்தனர். இந்த சந்திப்பு பாரப்பட்டி கனகராஜ் தலைமையில் நடைபெற்றது.இந்த சந்திப்பின் போது, வரவிருக்கும் தேர்தலில் அதிமுக வெற்றி பெற வேண்டும் என்பதற்காக முழு ஒத்துழைப்பும் அளிப்பதாக ரசிகர்கள் தெரிவித்தனர். மேலும், கட்சியின் கொள்கைகள் மற்றும் முன்னாள் ஆட்சியின் செயல்பாடுகள் தங்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் அவர்கள் கூறினார். இதற்கு பதிலளித்த அதிமுக தரப்பினர், ரசிகர்களின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்து, தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

ரஜினி ரசிகர்கள் அதிமுகவிற்கு ஆதரவு அறிவிப்பு வெளி யிட்டது, சேலம் மாவட்ட அரசியல் சூழலில் புதிய பரிமாணத்தை உருவாக்கியுள்ளது. தேர்தலை முன்னிட்டு இதுபோன்ற ஆதரவு அறிவிப்புகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அரசியல் பார்வையாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.



■ திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் நடைபெற்ற மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி பொதுக்கூட்டத்தில் தேர்தல் பரப்புரையாற்ற வருகை தந்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு ராதாபுரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் சபாநாயகர் அப்பாவு சால்வை அணிவித்து வரவேற்றார்.



■ மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சி தலைவர் பால்பாண்டி பிறந்த நாளை முன்னிட்டு, திமுக ஒன்றிய செயலாளர் பாலராஜேந்திரன் தலைமையில் பேரூராட்சி துணைத் தலைவர் வக்கீல் கார்த்திக் கதர் ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். அருகில் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.




■ தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்2026 வருகின்றன 2304 2026 அன்று நடைபெற உள்ள சூழலில், தேர்தலில் வாக்குரிமை உள்ள அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பது நமது ஜனநாயக கடமை என்பதனை எடுத்துரைக்கும் விதமாக மேல அனுப்பானடி பகுதியில் எமது இல்லத்தின் வாசலில் கோலம் இடுவதற்கு பதிலாக விதைப்பந்துகள் மூலம் ஒரு விரல் மை ஓவியம் வரைந்து, இந்த பூமிக்கும் மனிதனுக்கு மரங்கள் எவ்வளவு முக்கியமோ அதற்காக மரங்கள் உருவாகிட விதைப்பந்துகள் உதவுகின்றதோ, அது போல நாம் வாக்களிப்பதால் வளிமையான ஜனநாயகத்தை உருவாக்க முடியும் என்பதனை வழியுறுத்தும் விதமாக பசுமை செயற்பாட்டாளர் க.அசோக்குமார் இந்த விழிப்புணர்வு பணியினை மேற்கொண்டார்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000